[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது நான் இங்கே கேள்வி பதில் அளித்துக் கொண்டிருக்கிற குறிப்புகளி லிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற கல்லூரிகளை நடத் வதற்கு முடியாமல் சிரமப் பட்டுக் கொண்டிருக்கி றநிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே இந்தச் சிக்கலைத் தீர்த்ததற்குப் பிறகு மேலும் இது போன்ற தொழில் நுட்பப் பள்ளிகள் ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்க இயலும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பழனி தண்டாயுதபாணி தேவஸ் தானத்திற்கு ஆண்டு வருமானம் எவ்வளவு? கல்விக்காக எவ் வளவு தொகை செலவழிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1980 ஜூன் முடிய எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூ. 1,30,85,000. எவ்வளவு வந்தது என்ற கணக்கு விவரங்கள் இல்லை. இந்தள வில் பொதுக் காரியங்களுக்காகக் கல்லூரிகள், மருத்துவமனை போன்ற பல்வேறு விஷயங்களுக்காக சுமார் 14 லட்சம் ரூபாய் தேவஸ்தானம் செலவிட்டு வருகிறது.

திருவண்ணாமலை வனக் கோட்டத்தில் உள்ள கண்ணன் மேடை வனப்பகுதி.

*வினா எண். 264—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை வனக் கோட்டம் கண்ணன் மேடை காட்டில் 1977 ஆம் ஆண்டில் இருந்து 1980 ஆம் ஆண்டு வரை எத்தனை ஏக்கர் காடுகள் அரசாங்கத்தால் அழிக்கப்பட்டுள்ளது?

(ஆ) அழிக்கப்பட்டுள்ள காட்டில் அரசாங்கத்தால் என்ன செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ)

கண்ணன் மேடை ஒதுக்கக் காடு முட்புதர் நிறைந்த காடாகும். மறு வளர்ப்புப் பணிகளுக்காக இவ்விடத்தில் வெட்டி திருத்திய ஒதுக்கக் காட்டுப் பகுதியின் விவரம் கீழ் வருமாறு :

1977—42.6 எக்டேர்
1978—40.0 எக்டேர்
1979—40.0 எக்டேர்
1980—80.0 எக்டேர்

மொத்தம் 202.6 எக்டேர்

1981 பிப்ரவரி 10]

வெட்டி திருத்திய மேற்படி ஒதுக்கக் காட்டுப் பகுதியில் இது வரை 104.6 எக்டேர் பரப்பில் அச்சன் (Achan) செம்மரம் (Red Sanders) புளி மற்றும் கருவேல கன்றுகள் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள பரப்பும் 1980-81-ல் அதே மர வகையினை நடும் பொருட்டு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணன் மேடை காட்டில் முட்புதர்கள் வெட்டப் பட்டு, பல ஏக்கர்கள் பரப்பளவிலே புளியங் கன்றுகளும், மற்றும் பல மரங்களும் தற்போது நடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப் பரா மரிக்கப்படும் அந்த மரங்களினால் என்ன வருமானம் அரசுக்கு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் அங்கே கன்று கள் நடப்பட்டிருக்கின்றன என்று பதில் சொல்லியிருக்கிறேன். கன்றுகளில் இருந்து எப்படி வருமானம் வரும் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதியில் உள்ள காட்டில் இயற்கை யாகவே புளிய மரங்கள் இருந்திருக்கின்றன. இப்போது அவை கள் வெட்டப்பட்டு, அழித்து புதிதாகக் கன்றுகள் நடப்பட்டிருப் பதால், இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே மரங்கள் இருந்து அவைகள் அழிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. முட் புதர்களாக இருந்த பகுதிகள் ஆகியவற்றை அழித்து விட்டு, மரங்கள் வளர்க்கும் காடுகளாக மாற்றப்படுகிறது என்ற தகவல் தான் இங்கே இருக்கிறது.

கீரிப்பாறை இரப்பர் தோட்டத்தில் ஷெல்ஸ்கிராப்ஸ் விற்பனை.

*வினா எண். 265 —திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் கீரிப் பாறையில் இருக்கும் பாக்டரியில் ஷெல்லும் ஸ்கிராப்ஸும் (Shells and Scraps) உலர வைக்காமல் ஏலம் போடுவதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் குறித்துப் புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?